




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 331 | 4 Pages | 26.6.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 331 | 4 பக்கங்கள் | 26.6.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நிலையஞ்சிநீத்தாருளெல்லாங்கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை**

**விளக்கம்: வாழ்க்கையின் தன்மையைக் கண்டு அஞ்சித் துறந்தவர்கள் எல்லாரிலும், கொலைசெய்வதற்க்கு அஞ்சிக் கொல்லாத அறத்தைப் போற்றுகின்றவன் உயர்ந்தவன்.**

## இடுக்கி மாவட்ட கல்வி நிறுவனங்களுக்கு இன்று விடுமுறை



திருவனந்தபுரம், ஜூன் 26

கேரள மாநிலம் வயநாட்டில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. கனமழையால் சுரல்மலாவின் சாலியார் ஆற்றின் துணை ஆறுகளில் ஒன்றான புன்னப்புழா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கனமழையால் சுரல்மலாவின் முண்டகை பகுதியில் மீண்டும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. மேலும், மேப்பாடி, முண்டகையில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. பெய்லி பாலம் அருகே வெள்ளம் கரைபுரண்டு பாய்கிறது.

இந்த நிலையில் கனமழை காரணமாக கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் கல்வி நிறுவனங்களுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்து இடுக்கி ஆட்சியர் விக்னேஷ்வரி உத்தரவிட்டுள்ளார்.

## பவன் கல்யாண் புகைப்படம் மார்பிங் 3 பேர் கைது



விசாகப்பட்டினம், ஜூன் 26

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் கடற்கரையில் பிரதமர் மோடி தலைமையில் பிரமாண்ட யோகா தின விழா நடைபெற்றது. ஆந்திர முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு, துணை முதல்மந்திரி பவன் கல்யாண் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த நிகழ்வில் 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த நிலையில், யோகா தின விழாவில் எடுக்கப்பட்ட நடிகரும், ஆந்திர மாநில துணை முதல்வருமான பவன் கல்யாணின் புகைப்படங்களை மார்பிங் செய்து, சமூக ஊடகத்தில் ஒரு சிலர் பதிவிட்டுள்ளனர். அதில் பவன் கல்யாணை டேக் செய்து, அவரை பற்றிய அவதூறு கருத்துகளையும் பதிவிட்டுள்ளனர்.

இது தொடர்பாக, கோனசீமாவைச் சேர்ந்த சாய் வர்மா, மச்சிலிப்பட்டினத்தைச் சேர்ந்த ராமாஞ்சனேயுலு, ஐதராபாத்தைச் சேர்ந்த ஷேக் மஹ்பூ ஆகியோரை போலீசார் கைது செய்துள்ளனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## அடுத்தடுத்து வாகனங்கள் மீது மோதிய லாரி 3 பேர் பலி




அமராவதி: ஜூன் 26

ஆந்திராவின் அனகப்பள்ளி மாவட்டம், லங்கேலபாலம் என்ற இடத்தில்உள்ளதேசியநெடுஞ்சாலை16பகுதியில்உள்ளபோக்குவரத்து சிக்னலில் கடந்த திங்கட்கிழமை இரவு லாரி பைக்குகள் மற்றும் கார்கள் நின்றுகொண்டிருந்தன. அப்போது அதே சாலையில் வந்த லாரி ஒன்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது.

அப்போது லாரி சிக்னலில் நின்றுகொண்டிருந்த வாகனங்களை மோதியது. இந்த விபத்தில் பரிதாபமாக மூன்று பேர் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர். இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்து காரணமாக தேசிய நெடுஞ்சாலையில் போக்கு வரத்து பாதிக்கப்பட்டது.

கஜுவாகாவிலிருந்து அனகப்பள்ளி நோக்கிச் சென்ற லாரி, வாகனங்கள் மீது மோதிய பின்னர், ஒரு கனரக வாகனம் மீது மோதி நின்றது. இந்த விபத்தில் மூன்று கார்கள், ஒரு ஆட்டோ மற்றும் ஐந்து பைக்குகள் சேதமடைந்தன. இந்தசம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இறந்தவர்கள் அனகப்பள்ளி மண்டலம், ரெபாகாவைச் சேர்ந்த பச்சிகுராகாந்தி(52),கொனதலஅச்சையாநாயுடு(55),விசாகப்பட்டினம் மாவட்டம், அகனம்புடியைச் சேர்ந்த அனகப்பள்ளி, ரிங் ரோடு பகுதியைச் சேர்ந்த யெரப்பாடு (30) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

லாரி டிரைவர் கைது செய்யப்பட்டுள்ளார். விபத்துக்கு டிரைவரின் அலட்சியமே காரணம் என்று முதற்கட்ட ஆய்வு தெரிவிப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

# வேலூரில் கருணாநிதி சிலையை திறந்து வைத்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

வேலூர், ஜூன் 26

முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் வேலூர் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.அவர்பல்வேறுநிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். வேலூர் அரசு பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை அவர் இன்று திறந்து வைத்தார்.

இந்நிலையில், வேலூரின் கெங்கநல்லூரில் தி.மு.க. சார்பில் கட்டப்பட்ட கலைஞர் அறிவாலயத்தை முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.




மேலும், அங்கு 700 கிலோ வெண்கலத்தால் நிறுவப்பட்டுள்ள கருணாநிதியின் சிலையையும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சிலை திறப்பை தொடர்ந்து 30 அடி உயர கொடிக்கம்பத்தில் தி.மு.க. கொடியை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்றி வைத்தார். இதனை தொடர்ந்து நடந்த நிகழ்சியில் சிலம்பாட்டத்தில் கின்னஸ் சாதனை படைத்த 2 மாணவர்களுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பரிசுகளை வழங்கினார். மேலும், பிளஸ் 2 பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகள் 9 பேருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பரிசுகளை வழங்கினார்.

## தி.மு.க. கூட்டணியில் எந்த பிரச்சினையும் இல்லை அமைச்சர் கே.என்.நேரு

திருச்சி, ஜூன் 26

திருச்சியில் அமைச்சர் கே.என். நேரு இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"பா.ஜ.க. உடனான கூட்டணியை அ.தி.மு.க. தொண்டர்களே ஏற்றுக்கொள்ளவில்லை. தி.மு.க. கூட்டணியில் புகைச்சல் எதுவும் இல்லை. எல்லாம் சுமூகமாக நடந்து கொண்டிருக்கிறது. கூட்டணி கட்சியினர் தோழமையுடன் இருக்கிறார்கள். கூட்டணி தலைவர் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைவரிடமும் அனுசரித்து நடந்து கொள்கிறார்.

கூட்டணிகட்சிகள்தொடர்பான விவகாரங்களை அவர் பார்த்துக்



கொள்வார். எங்கள்கூட்டணியில் ஏதாவது பிரச்சினை வருமா? என்று சிலர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களின் கூட்டணியில்தான் பிரச்சினை இருக்கிறதே தவிர, எங்கள் கூட்டணியில்எந்தபிரச்சினையும் இல்லை." இவ்வாறு கே.என். நேரு தெரிவித்தார்.

## காவிரி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

தர்மபுரி ஜூன் 26

கர்நாடக மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. கனமழை காரணமாக கர்நாடக அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதையடுத்து அணைகளில் இருந்து உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் கபினி அணையில் இருந்து உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது.

கபினி அணையில் இருந்து காவிரியில் 25 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதன் காரணமாக காவிரி கரையோர பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி மத்திய நீர்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது.

## 'பா.ஜ.க. கூட்டணிக்கு யார் வந்தாலும் வரவேற்போம்' நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜூன் 26

பா.ஜ.க. கூட்டணியை உடைக்க முடியாது என பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார். சென்னையில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முருகன் மாநாடு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தி இருப்பதாகதெரிவித்தார். மேலும் இது தொடர்பாக அவர் கூறியதாவது;

"எங்கள் கூட்டணி உறுதியானது,

இறுதியானது. பா.ஜ.க. கூட்டணியை சிதைக்க வேண்டும் என்பதில் சிலர் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். அது நிச்சயமாக



நடக்காது. மதுரையில் நடைபெற்ற முருகன் மாநாடு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜெயிக்கப்போகும் கட்சியின் பக்கம்தான் எல்லோரும் வருவார்கள். எனவே, பா.ஜ.க. கூட்டணிக்கு யார் வந்தாலும் வரவேற்போம்."


இவ்வாறு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

## திருச்செந்தூர் கடல் 100 அடிதூரம் உள்வாங்கியது

திருச்செந்தூர், ஜூன் 26

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் அருகில் கடல் அமாவாசை, பவுர்ணமி போன்ற நாட்களில் உள்வாங்குவதும், வெளியே வருவதுமாக நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று அமாவாசை என்பதால் இயற்கை சீற்றம் காரணமாக திருச்செந்தூர் கடல் இன்று காலையில் இருந்தே சுமார் 100அடி தூரம் உள்வாங்கி காணப்படுகிறது. இதனால்அய்யா வைகுண்டர் அவதாரபதி அருகே கடற்கரையில் பாசி படிந்த பாறைகள் வெளியே தெரிகிறது.

பாறைகள் மீது பக்தர்கள் ஏறி நின்று செல்பி எடுத்து மகிழ்ந்தனர். ஆனாலும் பக்தர்கள் வழக்கமாக நீராடும் பகுதியில் பக்தர்கள்



எந்தவித அச்சமின்றி புனிதநீராடிவருகின்றனர். திருச்செந்தூர்கடல்கடந்த சில நாட்களாக இவ்வாறு நடப்பதால் இது வழக்கமான ஒன்று என பக்தர்கள் கருதி அச்சமின்றி புனித நீராடி சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

## கவியரசு கண்ணதாசன் பிறந்தநாள் விழாவும் சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா

ராஜா அண்ணாமலை மன்றத்தில் மாலை 6:15 மணி அளவில் நவீன் பைன் ஆர்ட்ஸ் சார்பில் அரவணைக்கும் சிகரம் முனிவர் R பன்னீர்செல்வம் ஏற்பாட்டில் கவியரசு கண்ணதாசன் பிறந்தநாள் விழாவும் சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழாவும் நடைபெற்றது விருது வழங்குபவர் மத்திய அரசு வழக்கறிஞர் திரு P M பக்தவச்சலம் திரு கோவை அன்பின் சிகரம் K ரமேஷ் M A Bsc திரு எம்ஜிஆர் பக்தர் சமூக சேவகர் டாக்டர் NS தமீம் மாவட்டத் தலைவர் சிறுபான்மை நலப்பிரிவு அதிமுக சுகாதாரத்துறை அமைச்சர் H V ஹண்டே அவர்களின் நேர்முக உதவியாளர் லைன் டாக்டர் ராஜா தேசிய விருது பெற்ற நடிகர்டாக்டர் கிங் காங்



திரு திரைப்பட நடிகர் டாக்டர் முத்துக்காளை பன்முக கலைஞர் திரைப்பட பின்னணி பாடகி சொர்முகி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியவர் மத்திய அரசின் ஓய்வு பெற்ற அதிகாரி S B விஜயன் நிறுவனத்தின் நேரடி உதவியாளர் P பீர் முஹம்மத் M ரஹீம் மற்றும் பலர் கலந்து கொண்டே நிகழ்ச்சியை சிறப்பித்தனர்




# பெரியார், அண்ணாவை விமர்சித்த இந்து முன்னணிக்கு கடும் கண்டனம் ஓ. பன்னீர்செல்வம்



சென்னை ஜூன் 26

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பகுத்தறிவுச் சிந்தனைகளை பட்டி தொட்டியெங்கும் எடுத்துச்சென்று சமுதாயத்தில் மிகப் பெரிய சீர்திருத்தத்தை ஏற்படுத்தியவர் தந்தை பெரியார். தந்தை பெரியாரின் கொள்கைகளை, திராவிட சித்தாந்தத்தை முன்னிறுத்தி, தேர்தலில்களம் கண்டு தமிழக அரசியலில் மிகப்பெரிய ஆட்சி மாற்றத்தை உருவாக்கிய பெருமைக்குரியவர் பேரறிஞர் அண்ணா.

பேரறிஞர் அண்ணாவின் கொள்கைக்கு மாறான ஆட்சி தமிழ்நாட்டில் நடைபெற்றபோது அதனை எதிர்த்து, பேரறிஞர் அண்ணாவின் பெயரில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் மக்கள் இயக்கத்தைத் தொடங்கி, கட்சியின் கொடியில் அவரது உருவத்தைப் பொறித்து, தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாட்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினை அமைத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆரைத் தொடர்ந்து, போறிஞர் அண்ணா காட்டிய வழியில் நான்கு முறை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை அமைத்தவர் ஜெயலலிதா. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால்,

தமிழக மக்களால், மக்கள்சக்தியை தன்னகத்தே கொண்ட எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதா ஆகியோரால் மதிக்கப்பட்ட, போற்றப்பட்ட தலைவர்கள் தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோர். நாங்களும் அந்த வழியைப்பின்பற்றிகொண்டு வருபவர்கள்தான்.

தமிழக அரசியல் வரலாற்றில் மிகப் பெரிய புரட்சியை உருவாக்கிய தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகிய இருபெரும் தலைவர்களை விமர்சித்து 'முருக பக்தர்கள் மாநாடு' என்ற போர்வையில் இந்துமுன்னணிவீடியோ வெளியிட்டது கடும் கண்டனத்திற்குரியது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# விழுப்புரம் புதுச்சேரி பயணிகள் ரெயில் 4 நாட்கள் ரத்து

சென்னை, ஜூன் 26

திருச்சி கோட்ட ரெயில்வே மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருச்சி ரெயில்வே கோட்டத்துக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதனால் விழுப்புரம்புதுச்சேரி பயணிகள் ரெயில் 4 நாட்களுக்கு முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது. அதன்படி விழுப்புரத்தில் இருந்து அதிகாலை 5.25 மணிக்கு புறப்படும் விழுப்புரம்புதுச்சேரி பயணிகள் ரெயில் (வண்டி எண் 66063), புதுச்சேரியில் இருந்து காலை 8.05 மணிக்கு புறப்படும் புதுச்சேரி விழுப்புரம் பயணிகள் ரெயில் (வண்டி எண் 66064) ஆகிய 2 ரெயில்களும் நாளையும், நாளை மறுநாளும் (வியாழன், வெள்ளி) மற்றும் 28, 30 ஆகிய தேதிகளில் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

மேலும் சென்னை எழும்பூரில் இருந்து காலை 6.35 மணிக்கு புறப்படும் எழும்பூர்புதுச்சேரி பயணிகள் ரெயில் (வண்டி எண் 66051), வருகிற 29ந் தேதி மட்டும் வசதிக்குரிய ரெயில் நிலையத்தில் சுமார் 60 நிமிடங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் இயக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வைகை அணையில் இன்று முதல் கூடுதல் தண்ணீர் திறப்பு



தேனி, ஜூன் 26

தேனிமாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே 71 அடி உயரம் கொண்ட வைகை அணை உள்ளது. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் முக்கிய நீராதாரமாக இந்த அணை விளங்குகிறது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே வைகை அணையில் ஓரளவு தண்ணீர் இருந்தது.

தென்மேற்கு பருவமழை கடந்த மாதம் முன்கூட்டியே தொடங்கியது. இதனால் வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. மேலும் அணையின்நீர்மட்டமும் கணிசமாக உயர்ந்தது. தற்போது அணையின் 64 அடியாக உள்ளது. இதற்கிடையே வைகை அணையில் இருந்து ஏற்கனவே மதுரை, திண்டுக்கல் மாவட்ட முதல் போக பாசனத்திற்காக வினாடிக்கு 900 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் வைகை அணையின் பூர்வீக பாசன பகுதியாக உள்ள ராமநாதபுரம் மாவட்ட தேவைக்காக அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். இதைத்தொடர்ந்து வைகை அணையில் போதுமான அளவு நீர் இருப்பு உள்ளதால் ராமநாதபுரம் பூர்வீக பாசன பகுதிகளுக்கு அணையில் இருந்து தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, (புதன்கிழமை) முதல் அடுத்த மாதம் (ஜூலை) 1ந்தேதி வரை 7 நாட்களில், மொத்தம் 1,251 மில்லியன் கன அடி தண்ணீர்திறக்கப்பட உள்ளது. அதாவது அணையில் இருந்து வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் வைகை ஆற்றுப்படுகை வழியாக தண்ணீர் திறக்கப்படுகிறது.

ஏற்கனவே வினாடிக்கு 900 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வரும் நிலையில், தற்போது கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட உள்ளதால் தேனி, திண்டுக்கல் உள்பட 5 மாவட்ட கலெக்டர்களுக்கு பொதுப்பணித் துறை சார்பில் முன்எச்சரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில், வைகை ஆற்றின் கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஆற்றில் இறங்கவோ, ஆற்றை கடக்கவோ கூடாது என்று முன்எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சாத்தான்குளம் தந்தைமகன் கொலை வழக்கு: நீதி வேண்டி இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்? சீமான்



சென்னை ஜூன் 26

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் இருவரும் காவல்துறையினரின் கொடூர தாக்குதலில் உயிரிழந்த கொடுநிகழ்வு நடந்து ஐந்து ஆண்டுகளைக் கடந்த பின்பும் வழக்கு விசாரணை இன்னும் நிறைவடையாதது ஏமாற்றமும், மனவேதனையும் அளிக்கிறது. விசாரணையை விரைந்து முடிக்காமல் மத்திய அரசின் குற்றப்புலனாய்வுத் துறை தொடர்ந்து காலங்கடத்தி வருவது வன்மையான கண்டனத்துக்குரியது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது, கொரோனா பெருந்தொற்று காலத்தில் 22.06.2020ம் நாள் அப்படுகொலைகள் தமிழ்நாடு காவல்துறையால் நிகழ்த்தப்பட்ட நிலையில், தமிழ்நாடு அரசின் சி.பி.சி.ஐ.டி முதலில் விசாரிக்கத் தொடங்கிய நிலையில், பின்பு மத்திய அரசின் சி.பி.ஐ விசாரணைக்கு மாற்றப்பட்டது. இப்படுகொலைகள் தொடர்பாக அன்றைய சாத்தான்குளம் காவல்நிலைய ஆய்வாளர், துணை ஆய்வாளர் உட்பட 9 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 105 சாட்சிகளிடம் விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கை 6 மாதத்துக்குள் விசாரித்து முடிக்க வேண்டும் என்று கடந்த 2021ம் ஆண்டு மார்ச் மாதம் ஐகோர்ட்டு மதுரைக் கிளை உத்தரவு பிறப்பித்த நிலையில் ஒவ்வொரு முறையும் சி.பி.ஐ. கால அவகாசம் கோரியதன் விளைவாக, படுகொலை நிகழ்ந்து ஐந்தாண்டுகளாகியும் இது வரை வழக்கு விசாரணை முடிவடையவில்லை.

அதிகாரத்தில் உள்ளவர்களால் நிகழ்த்தப்பட்டு நாட்டையே உலுக்கிய மிகக் கொடூர படுகொலை நிகழ்வான சாத்தான்குளம் படுகொலைகளின் வழக்கு விசாரணையே இத்தனை ஆண்டுகள் காலதாமதம் எனில், வெளியே தெரியாத சாமானியர்களின் கொலை வழக்குகளில் நீதி கிடைக்க எத்தனை நூற்றாண்டுகள் ஆகுமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

கொலை செய்யப்பட்டவர்கள் யார், எங்கே கொலை செய்யப்பட்டார்கள், எப்படி கொலை செய்யப்பட்டார்கள், ஏன் கொலை செய்யப்பட்டார்கள், கொலை செய்தவர்கள் யார் என்ற அனைத்தும் தெள்ளத்தெளிவாக தெரிந்திருந்தும், அதற்கான சாட்சிகள் அனைத்துமிருந்தும் ஐந்தாண்டுகள் ஆகியும் விசாரணை நிறைவடையாதது ஏன்? ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தில் சி.பி.ஐ. கால அவகாசம் கேட்பதும், அதை நீதிமன்றம் அனுமதிப்பதும் ஏன்? யாரைக் காப்பாற்ற, யாருடைய உத்தரவின் பேரில் சி.பி.ஐ. இப்படி காலதாமதம் செய்கிறது?

பொள்ளாச்சி பாலியல் வழக்கு முடிய 5 ஆண்டுகள், ஜெயராஜ் பென்னிக்ஸ் படுகொலை வழக்கில் 5 ஆண்டுகள் என நாடறிந்த வழக்குகளில் கீழமை நீதிமன்றங்களில் இத்தனை ஆண்டுகள் தாமதம் ஆகின்றது எனில், சுப்ரீம் கோர்ட்டு வரை மேல்முறையீடு செய்யப்பட்டு இறுதி தீர்ப்பு கிடைக்க இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ?

தாமதித்து வழங்கப்படும் நீதி அநீதிக்கு சமம் என்பதை இந்த நாட்டின் ஆட்சியாளர்களும், அதிகாரிகளும், நீதிமான்களும் எப்போது உணரப்போகிறார்கள்? குற்றவாளிகளே மரணித்துபோகும் வரை, குற்ற வழக்குகளில் விசாரணையை இழுத்தடிப்பது என்பது இந்த நாட்டில் மட்டுமே நிகழும் மிகப் பெரிய சாபக்கேடாகும்.

ஆகவே, தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகளால் படுகொலை செய்யப்பட்ட சாத்தான்குளம் தந்தைமகன் வழக்கு விசாரணையை விரைந்து முடித்து, குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனையைப் பெற்றுத்தந்து ஜெயராஜ் பென்னிக்ஸ் குடும்பத்திற்கு உரிய நீதியை விரைந்து வழங்க வேண்டுமெனவலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# அம்பையில் நகை, மணிபர்ஸ், செல்போன் திருடிய 2 பேர் கைது

திருநெல்வேலி ஜூன் 26

தேனி மாவட்டம், பெரியகுளம், வடக்குப் பூந்தோட்ட தெருவை சேர்ந்த சாய்குமார் (வயது 24), கடந்த 22ம்தேதி, அம்பாசமுத்திரம், நதியுண்ணி கால்வாய் அணைக்கட்டு கல்மடம் அருகே தனது காரை நிறுத்திவிட்டு, காரின் டேஸ்போர்ட்டில் தான் அணிந்திருந்த செயின் மற்றும் மோதிரம் என மொத்தம் 22 கிராம் மதிப்புள்ள தங்க நகைகளை கழற்றி வைத்துவிட்டு நண்பர்களுடன் குளிக்க சென்றுள்ளார். பின்பு குளித்துவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது காரில் வைத்திருந்த தங்க நகைகளை காணவில்லை.

இதேபோல் மேற்சொன்ன சாய்குமார் காரின் அருகே தென்காசி மாவட்டம், பெரிய பிள்ளை வலசையை சேர்ந்த விக்னேஷ், தனது மோட்டார் பைக் சீட்டிற்கு அடியில், மணிபர்ஸ் மற்றும் செல்போனை வைத்துவிட்டு குளிக்க சென்றுள்ளார். பின்பு வந்து பார்த்தபோது மணிபர்ஸ் மற்றும் செல்போனை காணவில்லை.

இதுகுறித்து இருவரும் அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன் அடிப்படையில் சப்இன்ஸ்பெக்டர் ஆனந்த பாலசுப்பிரமணியன் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார். அதில் கோடாரங்குளத்தைச் சேர்ந்த முருகேசன் (32), சேரன்மகாதேவி, அரசடி முதல் தெருவை சேர்ந்த ஜீவா சந்திரபாலன்(25) ஆகிய இருவரும் சேர்ந்து மேற்சொன்ன திருட்டில் ஈடுபட்டது தெரியவந்தது. இதனையடுத்து அவர்கள் 2 பேரையும் நேற்று முன்தினம் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

# குற்றாலம் அருவிகளில் குளிக்க தடை.. சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்



தென்காசி ஜூன் 26

தென்காசி மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா தலமாக குற்றாலம் விளங்கி வருகிறது. பொதுவாக சீசன் காலங்களில் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், புலியருவி உள்ளிட்ட அருவிகளில் குளிக்க சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிக அளவில் இருக்கும்.


இந்த நிலையில் குற்றாலம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு தொடர்மழை பெய்தது. இதனால் மெயின் அருவி, ஐந்தருவிக்கு நீர்வரத்து அதிகரித்தது.

எனவே, சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி இந்த 2 அருவிகளிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டது. இதனால் அங்கு வந்த சுற்றுலா பயணிகள்ஏமாற்றம்அடைந்தனர்.

இருப்பினும் அவர்கள் பழைய குற்றாலம், சிற்றருவி, புலியருவியில் குளித்து மகிழ்ந்தனர். குறிப்பாக பழைய குற்றாலம் அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது. இதனால் அங்கு பாதுகாப்பு பணியில் 10க்கும் மேற்பட்ட போலீசார் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குற்றால அருவிகளில் தற்போது தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், மெயின் அருவி, ஐந்தருவி உள்பட அனைத்து அருவிகளிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொது கட்டிட உரிமம் பெறுவதற்கான விதிகளில் திருத்தம்: தமிழக அரசு அறிவிப்பு



சென்னை, ஜூன் 26

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

எளிமை ஆளுமை திட்டத்தின் கீழ் பொது கட்டிட உரிமம், கட்டிடத்தின் உறுதித்தன்மை குறித்த சான்றிதழ் மற்றும் இந்த சான்றிதழ் வழங்க அனுமதிக்கப்பட்ட நியமனம் பெற்ற என்ஜினீயர்கள் குறித்த விவகாரங்களில் தமிழ்நாடு பொது கட்டிட விதிகளில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு எளிமைப்படுத்தப்பட்டு உள்ளன.

பொது கட்டிட உரிமம் பெறுவதற்கு பொதுப்பணித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற என்ஜினீயர்களிடம் இருந்து கட்டிடத்தின் உறுதித்தன்மை குறித்த சான்று பெற்று அளிக்கப்பட வேண்டும். பொது கட்டிடத்துக்கான உரிமத்தை இணைய வழியாக பெற்றுக் கொள்ளலாம். இதற்காக https://www.tnesevai.tn.gov.in/ என்ற இசேவை இணைய தளத்தில் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

இணையதளத்தில் உள்நுழைந்தவுடன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டபின், பொது கட்டிடங்களுக்கான உரிமத்தை இணைய வழியாக பெற்றுக்கொள்ளலாம். கட்டிட உறுதித்தன்மை சான்றிதழில் குறிப்பிட்டுள்ள காலம் வரை அக்கட்டிடத்தின் பொது கட்டிட உரிமம் செல்லுபடியாகும்.

ஏற்கனவே விண்ணப்பித்து நிலுவையில் இருந்தால், இசேவை இணையதளம் வழியாக மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும். பொது கட்டிடங்களுக்கான உரிமத்தின் காலம் முடியும் தருவாயில் இருந்தால் இசேவை இணையதளம் மூலம் புதுப்பித்துக்கொள்ளலாம். அதேபோன்று எளிமை ஆளுமை திட்டத்தின் கீழ் சுகாதார சான்றிதழ் பெறுவதற்கான நடைமுறையும் தற்போது எளிமைபடுத்தப்பட்டு உள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் சுகாதார சான்றிதழ் வழங்கும் தற்போதைய நடைமுறை மாற்றப்பட்டு, சுகாதாரம் மற்றும் மக்கள்நல்வாழ்வுதுறையின் அரசாணையில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி இசேவை இணையதளம் வாயிலாக சுய சான்றளிப்பின் அடிப்படையில் சுகாதார சான்றிதழை பெறலாம். இந்த சான்றிதழை பெறுவதற்காக தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின் உண்மைத் தன்மையை ஆய்வு செய்ய பொது சுகாதார துறை அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அனுமதி இல்லாமல் வீட்டில் பிரார்த்தனை கூட்டம் நடத்த முடியாது ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஜூன் 26

திருவாரூர் மாவட்டம், குடவாசல் தாலுகா அத்திக்கடையில் ஒரு வீட்டை கிறிஸ்தவ மதபோதகர் ஜோசப் வில்சன் என்பவர் கடந்த 2023ம் ஆண்டு விலைக்கு வாங்கினார். பின்னர், இந்த வீட்டில் பிரார்த்தனை கூட்டம் நடத்தினார். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால், குடவாசல் போலீஸ் இன்ஸ்பெக்டர் நேரில் வந்து விசாரித்து உள்ளார். இதையடுத்து, இந்த கட்டிடத்துக்கு கட்டிட அனுமதியும், தேவாலயம் கட்டுவதற்கு திட்ட அனுமதியும் கேட்டு மாவட்ட கலெக்டரிடம் மத போதகர் ஜோசப் வில்சன் விண்ணப்பித்தார்.

ஆனால் இந்த அனுமதிகளை தர மறுத்து, விண்ணப்பத்தை கலெக்டர் நிராகரித்து உத்தரவிட்டார்.

இதையடுத்து இந்த பிரார்த்தனை கூடத்தை மூடி தாசில்தார் 'சீல்' வைத்தார்.

இதை எதிர்த்து சென்னைஐகோர்ட்டில் மத போதகர் ஜோசப் வில்சன் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

சென்னை ஐகோர்ட்டு கடந்த 2021ம் ஆண்டு ஒரு வழக்கில் பிறப்பித்த தீர்ப்பின் அடிப்படையில், பிரார்த்தனை கூட்டம் அரங்கம் கட்டுவதாக இருந்தால், விதிகளின்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையான அனுமதியை பெற வேண்டும் என்று கூறியுள்ளது. எனவே, எந்த ஒரு அனுமதியையும் பெறாமல் பிரார்த்தனை கூட்டம் நடத்த எந்த உரிமையும் மனுதாரருக்கு இல்லை.

மனுதாரர் வீட்டை பிரார்த்தனை அரங்கமாக மாற்ற அதிகாரமும் இல்லை. அதனால், மனுதாரர் வீட்டுக்கு வைக்கப்பட்ட சீலை அகற்ற வேண்டும். அதே நேரம், இந்த வீட்டில் மனுதாரர் பிரார்த்தனை கூட்டத்தை நடத்தக்கூடாது.

ஒருவேளை இந்த வீட்டை பிரார்த்தனை அரங்கமாக மாற்ற விரும்பினால், மனுதாரர் மாவட்ட கலெக்டரை அணுகவேண்டும். அதேநேரம், மனுதாரர் எந்த அனுமதியையும் பெறாமல், மீண்டும் இந்த வீட்டை பிரார்த்தனை அரங்கமாக பயன்படுத்த முயற்சித்தால், சட்டப்படி தகுந்த நடவடிக்கையை மாவட்ட கலெக்டர் எடுக்க வேண்டும். இவ்வாறு நீதிபதி கூறியுள்ளார்.

# ராதாபுரத்தில் எம்.சாண்ட் மணல் திருடியவர் கைது: லாரி பறிமுதல்




திருநெல்வேலி ஜூன் 26

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம், மருதப்பபுரம் ஜங்ஷன் அருகே சப் இன்ஸ்பெக்டர் சகாயராபின் ஷாலு தலைமையிலான போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு, பலுகல்லை சேர்ந்த ராஜேஷ் (வயது 45) ஓட்டி வந்த லாரியை நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். அப்போது அவர் உரிய அனுமதிச்சீட்டு இல்லாமல் சட்டவிரோதமாக எம். சாண்ட் மணல் ஏற்றி வந்தது தெரியவந்தது. இதனையடுத்து சப் இன்ஸ்பெக்டர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு உரிய அனுமதிச்சீட்டு இல்லாமல் எம்.சாண்ட் மணல் ஏற்றி வந்த ராஜேஷை நேற்று முன்தினம் கைது செய்தார். மேலும் அவரிடமிருந்து சுமார் 30 டன் எடையுள்ள எம். சாண்ட் மணல் மற்றும் ஒரு லாரியை பறிமுதல் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

# திசையன்விளையில் பெண்ணிடம் 11 சவரன் தங்க சங்கிலி பறித்தவர் கைது பைக் பறிமுதல்

திருநெல்வேலி ஜூன் 26

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையில், கடந்த 22ம்தேதி மதியம் தனது வீட்டில் இருந்து தேவாலயம் செல்வதற்காக நடந்துசென்ற பெண்ணின் கழுத்தில் இருந்த 11 சவரன் தங்க சங்கிலியை, அந்த வழியாக மோட்டார் பைக்கில் வந்த நபர் பறித்துச் சென்றார். இதுகுறித்து மேற்சொன்ன பெண் அளித்த புகாரின் அடிப்படையில் திசையன்விளை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளியை கண்டறிந்து, தங்க சங்கிலியை மீட்டு நடவடிக்கை எடுக்க மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவிட்டார். அதன்பேரில் வள்ளியூர் உட்கோட்ட டி.எஸ்.பி. வெங்கடேஷ் மேற்பார்வையில், திசையன்விளை போலீஸ் இன்ஸ்பெக்டர் சீதாலட்சுமி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு, சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள சிசிடிவி பதிவுகள் மற்றும் நவீன தொழில்நுட்ப உதவியுடன் குற்றவாளி சம்பந்தமாக தீவிரமாக புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்த அலெக்ஸ்ராஜன் என்பவர் கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்து தங்க சங்கிலி முழுமையாக மீட்கப்பட்டு, குற்றம் செய்ய பயன்படுத்திய மோட்டார் பைக் கைப்பற்றப்பட்டு, குற்றவாளியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இந்த வழக்கில் துரிதமாக செயல்பட்டு, வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளியைக் கண்டறிந்து, அவரை கைது செய்து, பறிக்கப்பட்ட தங்க சங்கிலி முழுமையாக அவரிடமிருந்து மீட்கப்பட்ட பணியினை செய்த, வள்ளியூர் டி.எஸ்.பி. வெங்கடேஷ், திசையன்விளை போலீஸ் இன்ஸ்பெக்டர் சீதாலட்சுமி மற்றும் திசையன்விளை காவல் நிலைய காவலர்களை மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# திருநெல்வேலியில் கஞ்சா விற்ற வாலிபர் கைது

திருநெல்வேலி ஜூன் 26

திருநெல்வேலி மாவட்டம், முன்னீர்பள்ளம் பகுதியில் சப்இன்ஸ்பெக்டர் எட்வின் அருள்ராஜ் தலைமையிலான போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, தருவை பனங்காடு அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த மேலஇலந்தைகுளத்தை சேர்ந்த செல்லதுரை (வயது 19) என்பவரை போலீசார் சோதனை செய்தனர். அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய 20 கிராம் கஞ்சாவை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது. இதுகுறித்து மேற்சொன்ன சப்இன்ஸ்பெக்டர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு செல்லத்துரையை கைது செய்து நடவடிக்கை எடுத்தார். மேலும் அவரிடமிருந்து 20 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தார்.

# கோவில்பட்டியில் பைக் மீது லாரி மோதி விபத்து: ஓட்டல் ஊழியர் பலி



தூத்துக்குடி ஜூன் 26

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஜோதி நகர் 1வது தெருவை சேர்ந்த குலாம் முகைதீன் (வயது 60). இவர்மந்திதோப்பு ரோட்டில் உள்ள ஓட்டலில் காசாளராக வேலை பார்த்து வந்தார். இவருக்கு நசீர்பானு என்ற மனைவியும், 2 மகன்களும் உள்ளனர். குலாம் முகைதீன் கடந்த 21ம்தேதி காலை வீட்டில் இருந்து மோட்டார் பைக்கில் அண்ணா பஸ் நிலையம் அருகில் உள்ள மெடிக்கலுக்கு சென்றுவிட்டு, மீண்டும் வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்தார். மாதாங்கோவில் ரோடு வளைவில் அவர் சென்று கொண்டிருந்த போது, தேனியில் இருந்து பார்சல் சர்வீஸ் ஏற்றி வந்த லாரி கோவில்பட்டியில் டெலிவரியை முடித்துவிட்டு, தூத்துக்குடி நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராத விதமாக மோட்டார் பைக் மீது லாரி மோதியது.

இதில் தூக்கி வீசப்பட்ட குலாம் முகைதீன் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த கோவில்பட்டி கிழக்கு போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அவரது உடலை கைப்பற்றி கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து லாரி டிரைவரான மதுரை மாவட்டம், வடுகப்பட்டியை சேர்ந்த ஜெகன்ராமனை கைது செய்து விசாரணை செய்தனர்.

# பி.எம்.கிசான் உதவித்தொகை தனி அடையாள எண் கட்டாயம்

விவசாயிகளுக்குவழங்கப்பட்டு வரும் பி. எம். கிசான் உதவித்தொகை பெறும் விவசாயிகள், வரும் 30ம் தேதிக்குள் தனி அடையாள எண் பெற வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தகவல் தெரிவித்துள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் பி.எம்., கிசான் திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகை பெறும் 89,958 விவசாயிகளில், 65,336 பேர் மட்டுமே இதுவரை அடையாள எண் பெறுவதற்காக பதிவு செய்துள்ளனர். மீதமுள்ள 24,622 விவசாயிகள் உடனடியாக தங்கள் நிலம் தொடர்பான ஆவணங்களான பட்டா, ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட மொபைல் எண் விவரங்களுடன் வேளாண் துறை அலுவலர்களையோ, அல்லது பொது சேவை மையங்களையோ தொடர்பு கொண்டு உடனடியாக பதிவு செய்ய வேண்டும். ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு விவசாயிகளின் ஒப்புதல் பெறப்பட்டு பின்னர் செயலியில் பதிவேற்றம் செய்து தனி அடையாள எண் வழங்கப்படும். வரும் 30ம் தேதிக்குள் பி.எம்., கிசான் உதவித்தொகை பெறும் விவசாயிகள் தனி அடையாள எண் பெற அறிவுறுத்தப்படுகிறது. இதுவரை நான்கு மாதங்களுக்கு ஒருமுறை என 19 தவணைகள் கிசான் பி.எம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. என அதில் கூறப் பட்டுள்ளது.

# நெல்லையில் போலீசாரின் குழந்தைகளுக்கு துணை கமிஷனர் புத்தகங்கள் வழங்கி அறிவுரை



திருநெல்வேலி ஜூன் 26

நெல்லை மாநகர ஆயுதப்படை கவாத்து மைதானத்தில் வாராந்திர கவாத்து பயிற்சி நடைபெற்றது. அதில்நெல்லை மாநகர காவல் துணை கமிஷனர் (தலைமையிடம்) விஜயகுமார் கலந்து கொண்டதோடு, மாநகர காவல்துறையின் வாகனங்கள் சரியான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறதா என்றும், வாகனங்களின் செயல்பாடுகள் குறித்தும் அவர் ஆய்வு செய்தார்.

மேலும் அவர் மாநகர ஆயுதப்படையில் பணிபுரியும் காவலர்களின் குழந்தைகளுக்கு (6 முதல் 12ம் வகுப்பு வரை) தமிழ் மற்றும் ஆங்கில மொழி வழிகாட்டு புத்தகங்களை வழங்கி அறிவுரைகள் வழங்கினார். இந்த நிகழ்வில் போக்குவரத்து காவல் உதவி கமிஷனர்,

ஆயுதப்படை போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் ஆயுதப்படை போலீஸ் சப்இன்ஸ்பெக்டர்கள் கலந்துகொண்டனர்.

# தூத்துக்குடியில் 2.7 கிலோ கஞ்சா, 2 பைக் பறிமுதல்: 4 பேர் கைது



தூத்துக்குடி ஜூன் 26

தூத்துக்குடி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் உத்தரவின்படி, மதுவிலக்கு அமலாக்க பிரிவு டி.எஸ்.பி. குரு வெங்கட்ராஜ் மேற்பார்வையில், மாவட்ட எஸ்.பி.யின் தனிப்படை போலீசார் மற்றும் தூத்துக்குடி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய இன்ஸ்பெக்டர் கபீர்தாசன் ஆகியோர் நேற்று (24.6.2025) தூத்துக்குடி, சத்யாநகர்அருகேரோந்து பணி மேற்கொண்டனர். அப்போது அங்கு சந்தேகப்படும்படி மோட்டார் பைக்குகளில் நின்று கொண்டிருந்தவர்களை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். அதில் அவர்கள் தூத்துக்குடி அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த வசமுத்து மகன் அருண்சுனைமுத்து (22), கால்டுவெல் காலனியைச் சேர்ந்த பாலா மகன் ராஜ்குமார்(29), டிஎம்பி காலனியைச் சேர்ந்த மாடசாமி மகன் மாரி(எ) மாரிலிங்கம்(24), ஜார்ஜ் ரோடு பகுதியைச் சேர்ந்த சந்தனசேகர் மகன் சன்னத்பெருமாள்(27) ஆகியோர் என்பதும் அவர்கள் விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்ததும் தெரியவந்தது. உடனடியாக மேற்சொன்ன போலீசார் 4 பேரையும் கைது செய்து அவர்களிடமிருந்த 2 கிலோ 700 கிராம் கஞ்சா மற்றும் 2 மோட்டார் பைக்குகள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து தூத்துக்குடி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அங்கீகாரமில்லாத மனைகளை வரன்முறைப்படுத்த கால அவகாசம் நீட்டிப்பு: தமிழக அரசு



சென்னை, ஜூன் 26

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் 20.10.2016க்கு முன்பு பத்திரப்பதிவு செய்யப்பட்ட அங்கீகாரமில்லாத மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு விண்ணப்பிக்க வருகிற 30ந் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. தற்போது இந்த கால அவகாசம் நவம்பர் 30ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்புபவர்களும், மலையிட பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறை செய்வதற்கும் www.tcponline.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருநெல்வேலி: கொள்ளை, மிரட்டல் வழக்கில் வாலிபர் குண்டர் சட்டத்தில் கைது




திருநெல்வேலி ஜூன் 26

திருநெல்வேலி மாவட்டம், தாழையூத்து பகுதியில் கொள்ளை மற்றும் மிரட்டல் வழக்கில் ஈடுபட்ட தாழையூத்து, காமிலா நகரைச் சேர்ந்த கருத்தபாண்டி மகன் வெயில்குமார்(எ) கொக்கிகுமார் (வயது 29) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவர் கொலை முயற்சி, அடிதடி, கொள்ளை, மிரட்டல் போன்ற வழக்குகளில் ஈடுபட்டு பொதுமக்களை அச்சுறுத்தி வருவதாக தாழையூத்து காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சபாபதி கவனத்திற்கு வந்தது. இதனையடுத்து அவர் வெயில்குமார் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன்பேரில் மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில், வெயில்குமார் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# இந்து மதம் என்ற ஒன்றே இல்லை: திருமாவளவன் பரபரப்பு பேச்சு



சென்னை, ஜூன் 26

2025ம் ஆண்டிற்கான விசிக விருது வழங்கும் விழாவில் அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் பேசியதாவது:

தமிழ்நாடு அரசியலை நாம் கூர்மைப்படுத்துகிறோம்: சனாதன சக்திகள் தமிழ்நாடு மண்ணை நஞ்சாக்க விடமாட்டோம். சனாதன சக்திகளா?, விடுதலை சிறுத்தைகளா? என்பது தான் தமிழ்நாட்டு பாலிடிக்ஸ். தமிழ்நாட்டு அரசியலை மதவாத அரசியலை நோக்கி மடைமாற்றம் செய்ய பலர் முயற்சிக்கின்றனர்.

மதச்சார்பின்மைக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ்., பாஜக செயல்படுவதால் அது கூர்மைப்படுகிறது. மதச்சார்பின்மை கூர்மைப்படக் காரணமான ஆர்.எஸ்.எஸ்., பாஜகவுக்கு நன்றி. தேர்தல் கட்சி என்ற வகையில் பாஜகவை எதிர்க்கவில்லை; அவர்களின் அரசியலை எதிர்க்கிறோம்.

நாட்டில் அமையும் அரசு மதச்சார்பற்றதாக இருக்க வேண்டும்; பாஜகவோ அரசமைப்பை எறிய நினைக்கிறது. நாம் கொடியேற்ற, பேனர் கட்ட, பொதுக் கூட்டங்களை நடத்த போராட வேண்டியுள்ளது எங்கள் இயக்கம் சட்டமன்ற, நாடாளுமன்ற சீட்டு பேரம் பேசுவதற்கு அல்ல; ஒருநாள் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்றுகூட நான் அறிவித்துவிடுவேன். இருக்கையில் எனக்கு நம்பிக்கை இல்லை; பிளாஸ்டிக் சேர், தரையில் கூட அமருவேன்.

இந்து மதம் என்ற ஒன்றே கிடையாது; ஆங்கிலேயர் ஆட்சிக்கு பிறகு இந்து மதம் வந்தது; பிற மதங்களில் சகோதரத்துவம் உள்ளது; இந்து மதம் அடிப்படையிலேயே பாகுபாடு கொண்டது; அணு ஆயுதங்களால் கூட தகர்க்க முடியாதது இந்தியாவில் உள்ள சாதிய கட்டமைப்பு.

திருநீரை அழித்தது பற்றி பேசுவோர் என்னை மேல்பாதி கோயிலுக்குள் அழைத்து செல்ல முடியுமா?. புண்ணியம் கிடைக்குமென திருநீறு பூசவில்லை; அவமதிக்கும் நோக்கில் அதை அழிக்கவும் இல்லை. என்னை சங்கராச்சாரியராக்க வேண்டாம்; சகோதரனான ஏற்றுக்கொள்ளத்தான் சொல்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.1 கோடி மதிப்புள்ள பீடி இலைகள் பறிமுதல்



தூத்துக்குடி ஜூன் 26

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், ஆறுமுகநேரி அருகே, கோட்டை மலை காட்டுப்பகுதி, கொம்புத்துறை கடற்கரை பகுதியில் இருந்து இலங்கைக்கு பீடி இலைகள் கடத்தபடுவதாக கியூ பிரிவு இன்ஸ்பெக்டர் விஜய் அனிதாவுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் கியூ பிரிவு சப்இன்ஸ்பெக்டர் ஜீவமணி தர்மராஜ், சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ராமர், ஏட்டுகள் இருதயராஜ்குமார், இசக்கிமுத்து, காவலர் பழனி பாலமுருகன் ஆகியோர் கொம்புத்துறை கடற்கரை பகுதியில் இன்று அதிகாலை ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது இலங்கைக்கு கடத்துவதற்காக மினிலாரியிலும் பதிவு எண் இல்லாத ட்ரெய்லருடன் கூடிய டிராக்டரிலும் கொண்டு வரப்பட்ட 30 கிலோ வீதம் 103 மூட்டைகளில் இருந்த சுமார் 3,000 கிலோ பீடி இலைகளை போலீசார் கைப்பற்றினர். இதன் சர்வதேச மதிப்பு ரூ.1 கோடி ஆகும். மேலும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மினிலாரி, டிராக்டர் மற்றும் மோட்டார் பைக் பறிமுதல் செய்யப்பட்டது. கைப்பற்றபட்ட பீடி இலைகள் மற்றும் வாகனங்கள்சுங்கத்துறை வசம் ஒப்படைக்கப்பட உள்ளது. பீடி இலைகளை இலங்கைக்கு கடத்த முயன்ற மர்ம நபர்கள் போலீசாரைக் கண்டதும் தப்பி ஓடிவிட்டனர். அவர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

# பள்ளி மாணவன் தற்கொலை: 4 ஆசிரியர்கள் சஸ்பெண்ட்

தூத்துக்குடி ஜூன் 26

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் பரமன்குறிச்சி அருகே உள்ள சமத்துவபுரத்தை சேர்ந்த முத்துகிருஷ்ணன் (15). பரமன்குறிச்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வந்தார்.

இதனிடையே, வீட்டுப்பாடம் எழுதி வராடதால் ஆசிரியர்கள் நேற்று பள்ளியில் மாணவன் முத்துகிருஷ்ணனை கண்டித்துள்ளனர். மேலும், மாணவனை ஆசிரியர்கள் பிரம்பால் அடித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து பள்ளி முடிந்து வீட்டிற்கு சென்ற மாணவன் தனது பெற்றோரிடம் ஆசிரியர்கள் தன்னை பிரம்பால் அடித்ததாக கூறியுள்ளார். இதனால் பெற்றோர்கள் நாளை பள்ளிக்கு வந்து என்ன என்று விசாரிக்கிறோம் என்று கூறியுள்ளனர். இதனால் மனம் உடைந்த மாணவன் என் சாவுக்கு ஆசிரியர்கள் பியூலா, மேரி, வளர்மதி மற்றும் தலைமை ஆசிரியர் காரணம் என கடிதம் எழுதி வைத்துவிட்டு நேற்று இரவு 8 எட்டு மணியளவில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்த திருச்செந்தூர் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மாணவனின் உடலை மீட்டு பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், மாணவன் தற்கொலை தொடர்பாக பரமன்குறிச்சி பள்ளிக்கு நேரில் சென்று மாவட்ட கல்வி அலுவலர் விசாரணை நடத்தினார். இதனைதொடர்ந்து இந்த சம்பவம் தொடர்பாக ஆசிரியைகள் வளர்மதி, பியூலா, மேரி தலைமை ஆசிரியை சத்யா ஆகிய 4 பேரை சஸ்பெண்ட் செய்து மாவட்ட கல்வி அலுவலர் உத்தரவிட்டுள்ளார்.

# திருப்பரங்குன்றம் மலை விவகாரம்: 2 நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பு

மதுரை, ஜூன் 26

திருப்பரங்குன்றம் மலையில் இஸ்லாமியர்கள் கந்தூரி (ஆடு, கோழிகள் பலி) கொடுக்ககூடாது என இந்து முன்னணி சார்பில் சில மாதங்களுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதனை தொடர்ந்து மதுரை மாவட்டத்தில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பக்தர்கள் வழிபடவே பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

அதேபோல் மலை மீது உள்ள சிக்கந்தர் பாதுஷா தர்காவில் ஆடு, கோழியுடன் ஏறக்கூடாது என்று போலீஸ் தரப்பில் உத்தரவிடப்பட்டது.

இதனிடையே இந்து மக்கள் கட்சி சார்பில் மதுரை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது.

அதில், "திருப்பரங்குன்றம் மலையில் உயிரினங்களை பலியிடுவதற்கும், சமைத்து பரிமாறுவதற்கும் தடை விதித்து உத்தரவிட வேண்டும்" என தெரிவிக்கப்பட்டது. திருப்பரங்குன்றம் மலை, சிக்கந்தர்மலை எனஅழைப்பதற்கு தடை விதிக்க கோரியும், சிக்கந்தர் பாதுஷா தர்கா புதுப்பிக்கும் பணிக்கு காவல்துறை தொந்தரவு செய்யக்கூடாது எனவும் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன

இந்தமனுக்கள்நீதிபதிகள் நிஷா பானு, ஸ்ரீமதி ஆகியோரின் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தபோது நீதிபதிகள், "கடவுள்கள் சரியாகவே இருக்கிறார்கள். சில மனிதர்களே சரியாக இல்லை" என்று கருத்து தெரிவித்தனர். இந்த மனுக்கள் மீதான விசாரணை இன்று மீண்டும் வந்த போது, நீதிபதி நிஷா பானு அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்வதாக உத்தரவிட்டார். ஆனால் நீதிபதி ஸ்ரீமதி வழக்கின் விசாரணை கூடுதல் நீதிபதிகள் அமர்வுக்காக தலைமை நீதிபதிக்கு பரிந்துரைக்கப்படுவதாக மாறுபட்ட தீர்ப்பை அளித்தார்.

இதையடுத்து இந்த வழக்கு கூடுதல் நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிப்பதற்காக தலைமை நீதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டது.

தின கனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
26.6.2025

# திருச்செந்தூர் முருகன் கோவில் குடமுழுக்கு: 400 சிறப்பு பஸ்கள் இயக்கம்




தூத்துக்குடி ஜூன் 26

திருச்செந்தூர் முருகன் கோவிலில் 14 ஆண்டுகளுக்குப்பின்குடமுழுக்கு விழா வரும் 7ம் தேதி நடைபெறுகிறது. கோவில் குடமுழுக்கையொட்டி தமிழகம் முழுவதிலும் இருந்து 5 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் திருச்செந்தூர் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், முருகன் கோவில் குடமுழுக்கையொட்டி திருச்செந்தூருக்கு 400 சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் என்று போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது. சென்னை, திருச்சி உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து திருச்செந்தூருக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் கார் விபத்து கர்ப்பிணி உட்பட இருவர் பலி

சென்னை, ஜூன் 26

சென்னை அனகாபுத்தூர் அருகே மதுரவாயல் பைபாஸ் சாலையில் மணிகண்டன் என்ற நபர் குடிபோதையில் காரை எதிர்திசையில் வேகமாக ஓட்டி வந்துள்ளார். அப்போது மணிகண்டன் ஓட்டி வந்த கார், மற்றொரு கார் மீது நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில், மற்றொரு காரில் பயணம் செய்த கர்ப்பிணி உட்பட இருவர் உயிரிழந்தனனர். இருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மது போதையில் எதிர்திசையில் காரை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியதாக டிரைவர் மணிகண்டனை போலீசார் கைது செய்ததுடன், அவரது காரையும் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (26.6.2025)

**மேஷம்:** வேலைப்பளு அதிகமாகும். குடும்பத்தில் ஒருவரால் சிறு மனமுடைவு ஏற்படும். பயணங்களில் எச்சரிக்கை தேவை.

**ரிஷபம்:** தெய்வ சக்தி உங்களை ஆதரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல செய்தி ஒன்று வரக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். பண விஷயங்களில் கவனம் தேவை. பொறுமையாக செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்:** வீட்டில் நிம்மதியான சூழ்நிலை. உறவினர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் லாபம் கூடும். பரிகாரம்: சந்திரன் வழிபாடு.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். புது பொறுப்புகள் வரும். குடும்பத்தில் நற்செய்தி. பரிகாரம்: சூரியனை நமஸ்காரம் செய்க.

**கன்னி:** வேலை வாய்ப்பு கிடைக்கும். நண்பர்களால் ஆதரவு. உடல் ஆரோக்கியத்தில் சிறிய கவலை.

நிதி நிலைமை மேம்படும். தொழில் முனைவோர்களுக்கு புதிய வாய்ப்புகள்.

**துலாம்:** பழைய பிரச்சனைக்கு தீர்வு. செலவுகள் கட்டுப்படுகின்றன. மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** சாமர்த்தியமாக நடந்தால் வெற்றி உண்டு. தொழிலில் வளர்ச்சி. முக்கிய முடிவுகளை தவிர்க்கவும்.

**தனுசு:** ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகள் பற்றி சந்தோஷம். ஆன்மிகத்தில் ஈடுபாடு வரும். பரிகாரம்: விஷ்ணு சஹஸ்ரநாமம்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்கள் நிறைவேறும். நண்பர்களுடன் சந்திப்பு. பயணங்கள் சாதகமாக அமையும்.

**கும்பம்:** எதிர்பாராத வருமானம் கிடைக்கும். வாக்குவாதம் தவிர்க்கவும். அலுவலகத்தில் சிறு பிரச்சனைகள்.

**மீனம்:** மனநிம்மதி அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம். நிதி நிலை மேம்படும். பரிகாரம்:தக்ஷிணாமூர்த்திவழிபாடு.

# திருவள்ளூர்: பள்ளி வேன் மீது கார் மோதி விபத்து

திருவள்ளூர் ஜூன் 26

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையத்தில் இன்று மாலை மாணவ, மாணவியரை ஏற்றிக்கொண்டு பள்ளி வேன் சென்றுகொண்டிருந்தது. அப்போது, சாலையில் வேகமாக வந்த கார் முன்னே சென்றுகொண்டிருந்த பள்ளி வேன் மீது மோதியது.



இந்த விபத்தில் கார்தீப் பற்றி எரிந்தது. துரிதமாக செயல்பட்ட அங்கிருந்தவர்கள் வேனில் இருந்த மாணவ மாணவியரை பத்திரமாக மீட்டனர். மேலும், காரில் இருந்தவர்களும் மீட்கப்பட்டனர். காரில் பற்றி எரிந்த தீயையும் அணைத்தனர். இந்த விபத்து தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை ஐகோர்ட்டில் முன் ஜாமின் கோரி பூவை ஜெகன்மூர்த்தி மனு விசாரணை



சென்னை, ஜூன் 26

திருவள்ளூர் மாவட்டம் களம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த தனுஷ் என்ற இளைஞர், தேனியைச் சேர்ந்த விஜய ஸ்ரீ என்கிறபெண்ணை இன்ஸ்டாகிராமில் காதலித்து பதிவுத் திருமணம் செய்துள்ளார். இந்த விவகாரத்தில் பெண் வீட்டார் எதிர்ப்பு தெரிவித்தநிலையில் சிலர் இளைஞரின் வீட்டிற்குள் நுழைந்து இளைஞரின் சகோதரர் இந்திரஜித்தை கடத்தி சென்றனர். பின்னர்சிறிது நேரத்தில் அவரை அவர் வீட்டில் விட்டு சென்றுவிட்டனர்.

இந்த கடத்தல் தொடர்பான புகார் தெரிவிக்கப்பட்டதை அடுத்து போலீசார் கடத்தலில் ஈடுபட்ட 2 பேரை கைது செய்தனர். இந்த கடத்தலில் புரட்சி பாரதம் கட்சித் தலைவரும், கே.வி. குப்பம் தொகுதி எம்.எல்.ஏவுமான ஜெகன் மூர்த்திக்கு தொடர்பு இருப்பதாக புகார் எழுந்தது.

இந்த நிலையில் கடத்தல் வழக்கில் போலீசார் தன்னை கைது செய்வார்கள் என்ற அச்சத்தில் ஜெகன் மூர்த்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் ஜானிக்காக மனுதாக்கல் செய்தார். இதனையடுத்து இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என தலைமை நீதிபதியிடம் அனுமதி கோரப்பட்டது. இந்த நிலையில் சென்னை ஐகோர்ட்டில் முன்ஜாமின்கோரி பூவை ஜெகன்மூர்த்தி மனு மீதான வழக்கின் விசாரணை நாளை நடைபெறுகிறது.

# மெயின் அருவி, ஐந்தருவியில் குளிக்க மீண்டும் தடை

நெல்லை, ஜூன் 26



கேரளாவில் தென் மேற்கு பருவமழை தொடங்கி உள்ளதால் தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. தற்போது தென்காசி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள குற்றால அருவிகளான மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் தொடர் மழையால் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுவந்த நிலையில் அருவிகளுக்கு தற்போது நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக மெயின் அருவி, ஐந்தருவியில் குளிக்க மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் குற்றாலம் வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்.

# தமிழக கடலோரங்களில் பயங்கரவாதிகள் ஊடுருவலை தடுக்கும் பாதுகாப்பு ஒத்திகை




சென்னை, ஜூன் 26

கடல் வழியாக பயங்கரவாதிகள் மற்றும் சமூக விரோதிகள் ஊடுருவுவதை தடுக்கும் விதமாக தமிழகத்தின் கடலோர பகுதிகளில் 'சாகர் கவாச்' எனப்படும் பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றது. இந்திய கடலோர காவல் படை, கடலோர பாதுகாப்பு குழுமம் ஆகியோர் இணைந்து இந்த ஒத்திகையை மேற்கொண்டனர். இதன்படி நாகை மாவட்டத்தில் நாகை, கோடியக்கரை, வேதாரண்யம் கடற்பகுதிகளில் 'சாகர் கவாச்' ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பயங்கரவாதிகள் போல் ஊடுருவ முயன்றவர்களை கைது செய்து ஒத்திகையில் நடத்தினர். கடலூரில் நடைபெற்ற பாதுகாப்பு ஒத்திகையில், கடலூர் துறைமுகத்தை தகர்க்க போலி வெடிகுண்டுகளுடன் வந்த 5 பேரை வீரர்கள் கைது ஒத்திகை நடத்தினர். திருவாரூர் மாவட்டத்தில், திருத்துறைப்பூண்டி அருகே முத்துப்பேட்டை கடலோர பகுதியில் கடலோர பாதுகாப்பு குழும போலீசார் 'சாகர் கவாச்' ஒத்திகையில் ஈடுபட்டனர். அப்போது அதிகாரிகள் மீனவர்களுக்கு பாதுகாப்பு அறிவுறுத்தல்களை வழங்கினர்.

# தன்னை உருவ கேலி செய்தவர்களுக்கு நடிகை நேஹா கொடுத்த பதிலடி



சின்னத்திரையில் குழந்தை நட்சத்திரமாக நடிக்க தொடங்கி, தற்போது முன்னணி நடிகையாக ஜொலிக்கிறார், நேஹா. இவர் தற்போது பிரபலமான 'பாக்கியலட்சுமி' தொடரில் நடித்து வருகிறார். அதில் வரும் ஒரு நடனக்காட்சியில் நடித்த பிறகு, அவருக்கான கேலி, கிண்டல் அதிகமானது. குறிப்பாக நிறைய உருவ கேலிகளை எதிர்கொண்டார்.

ஆனாலும் கேலி, கிண்டல்களை பொருட்படுத்தாமல் அவர் நடித்துக்கொண்டே இருந்தார். இந்தநிலையில் சமூக வலைதளங்களிலும் அவருக்கு எதிரான கேலி பேச்சுகள் தொடர்ந்த நிலையில், அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் நேஹா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில், 'அய்யய்யோ இவரு மூஞ்சிய பாத்தியா, இவரு மூஞ்சி அப்படியே சோப்பு விளம்பரத்துல வர்ற மாடல் மாதிரியே இருக்காருல. குரங்கு கடிச்ச கொய்யாக்கா மாதிரி ஒரு மூஞ்சி, இவங்க என் மூஞ்ச குறை சொல்றாங்க...' என்று சந்தானத்தின் காமெடிக்கு நேஹா 'ரீல்ஸ்' செய்துள்ளார்.

இதன்மூலம் தனக்கு எதிரான உருவக்கேலி விமர்சனங்களுக்கு நேஹா பதிலடி கொடுத்துள்ளார். நேஹாவின் இந்த பதிவுக்கு திரை பிரபலங்கள் பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# 'கேம் சேஞ்சர்' படம்தான் நான் வைத்த தவறான படி தயாரிப்பாளர் தில் ராஜு வருத்தம்



இந்த ஆண்டின் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படங்களில் ஒன்று ''கேம் சேஞ்சர்''. ஆனால் எதிர்பார்ப்புகளை அப்படம் பூர்த்தி செய்யவில்லை. ''ஆர்.ஆர்.ஆர்'' படத்தின் மிகப்பெரிய வெற்றிக்கு பிறகு ராம் சரண் நடிப்பில் வெளியான இப்படம் படக்குழுவினருக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியது. இதற்கிடையில் 'இந்தியன்2' மற்றும் 'கேம் சேஞ்சர்' என தொடர் தோல்வி படங்களால் முன்னணி இயக்குனரான ஷங்கர் விமர்சனத்துக்குள்ளாகி இருக்கிறார். மேலும் இயக்குனர் ஷங்கர் படத்தை 7 மணி நேர காட்சியாக எடுத்து 3 மணிநேரமாக குறைத்தார் என அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. இதற்கிடையில், 'கேம் சேஞ்சர்' படம் தான் நான் வைத்த தவறான படி, என அதன் தயாரிப்பாளர் தில் ராஜு வருத்தம் தெரிவித்துள்ளார். அவர் கூறும்போது, "ஷங்கர் போன்ற ஒரு பெரிய இயக்குனருடன் நான் இதுவரை பணியாற்றியது இல்லை. அந்தவகையில் ஒரு ரிஸ்க் எடுத்தேன். ஆனால் 'கேம் சேஞ்சர்' தான் நான் வைத்த தவறான படி." படம் உறுதியானபோதே நான் ஒப்பந்தத்தில் சில விஷயங்களை குறிப்பிட்டிருக்கலாம். நான் அதை செய்யாமல் விட்டது தான் தவறு. ஒரு கட்டத்துக்கு மேல் பல விஷயங்கள் என் கையை விட்டு போய்விட்டது. என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. இப்படி அடிபட்டு தான் கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. இனி வருங்காலத்தில் உஷாராக இருப்பேன்'', என்றார்.

# "குட் டே" திரைப்பட விமர்சனம்

பிரித்விராஜ் தனது குடும்பத்தை ஊரில் விட்டுவிட்டு, திருப்பூரில் உள்ள பனியன் கம்பெனியில் பணியாற்றி வருகிறார். அங்கு பெண்ணிடம் அத்துமீறும் மானேஜரை கண்டித்ததால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறார். சம்பளமும் தடைபடுகிறது. சோகத்தில் மது குடிக்கும் பிரித்விராஜ், தனது பழைய காதலி வீட்டுக்கு சென்று பிரச்சினையில் சிக்குகிறார். போலீசாரிடம் பிடிபடுகிறார். போலீஸ் நிலையத்தில் ஒரு குழந்தை காணாமல் போன புகாரில் போலீசார் பிசியாக இருக்கும்போது, இன்ஸ்பெக்டரின் சீருடை மற்றும் வாக்கிடாக்கியை எடுத்துக்கொண்டு 'எஸ்கேப்' ஆகிறார், பிரித்விராஜ். பிரித்விராஜிடம் இருந்து சீருடை மற்றும் வாக்கிடாக்கியை போலீசார் கைப்பற்றினார்களா? காணாமல் போன குழந்தையை மீட்டார்களா? என்பதே படத்தின் மீதி கதை. குடிகாரரின் நடை, பேச்சு, உடல்மொழியை அச்சு பிசகாமல் பிரதிபலித்து, கதாபாத்திரத்துக்கு நியாயம் சேர்த்துள்ளார், பிரித்விராஜ். இயல்பான அவரது நடிப்பு ரசிக்க வைக்கிறது. கல்லூரி தோழியாக வரும் மைனா நந்தினி கலகலப்பூட்டுகிறார். அவருக்கான காட்சிகளை இன்னும் சேர்த்திருக்கலாம். மைனா நந்தினியின் கணவராக 'ஆடுகளம்' முருகதாஸ், இன்ஸ்பெக்டர் ஜீவா சுப்பிரமணியம், ஆட்டோ டிரைவர் காளி வெங்கட், பக்ஸ், போஸ் வெங்கட், வேல ராமமூர்த்தி என கதாபாத்திரங்கள் அனைவருமே நினைவில் நிற்கிறார்கள். மதன் குணதேவின் ஒளிப்பதிவு கதையுடன் பயணிக்க வைக்கிறது. கோவிந்த் வசந்தாவின் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணி இசையில் கவனம் தேவை. யூகிக்க முடியாத திரைக்கதை பலம். கதைக்கு பொருந்தாத காட்சிகள் பலவீனம். மதுவுக்கு அடிமையானவர்களின் மனநிலையால் என்னென்ன விபரீதங்கள் நடக்கும் என்பதை, அனுபவ ரீதியாக கதை சொல்லி, எதார்த்த படைப்பாக கொடுத்துள்ளார், இயக்குனர் என்.அரவிந்தன். கிளைமேக்ஸ் காட்சி உணர்ச்சிபூர்வமானது.

குட் டே எல்லா நாளும்...

# ஆஸ்திரேலியா வெஸ்ட் இண்டீஸ் முதலாவது டெஸ்ட் தொடக்கம்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீஸ்க்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது.

இந்நிலையில் ஆஸ்திரேலியா வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பிரிட்ஜ்டவுனில் இந்திய நேரப்படி இன்று (புதன்கிழமை) இரவு 7.30 மணிக்குதொடங்குகிறது. இது 4வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்டது என்பதால் அந்த வகையில் இந்த தொடர் இரு அணிக்கும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சமீபத்தில் 3வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 5 விக்கெட் வித்தியாசத்தில் தென்ஆப்பிரிக்காவிடம் தோல்வி அடைந்தது. தொடக்க ஆட்டக்காரராக இறங்கிய லபுஸ்சேன் அணியில் இருந்து கழற்றி விடப்பட்டுள்ளார். விரலில் ஏற்பட்ட காயத்தால் ஸ்டீவன் சுமித் விலகி விட்டார்.

இரு மூத்த வீரர்கள் இல்லாதது சற்று பலவீனம் தான் என்றாலும் அவர்களுக்கு பதிலாக ஜோஷ் இங்லிஸ், சாம் கான்ஸ்டாஸ் சேர்க்கப்பட்டு உள்ளனர். கவாஜா, டிராவிஸ் ஹெட், அலெக்ஸ் கேரி, கேமரூன் கிரீன், வெப்ஸ்டர் ஆகியோர் பேட்டிங்கில் வலு சேர்க்கிறார்கள். பந்து வீச்சில் கேப்டன் கம்மின்ஸ், மிட்செல் ஸ்டார்க், ஹேசில்வுட், ஸ்காட் போலன்ட் மிரட்ட காத்திருக்கிறார்கள்.

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு சுழற்பந்து வீசும் ஆல்ரவுண்டர் ரோஸ்டன் சேஸ் கேப்டனாக நியமிக்கப்பட்டு உள்ளார். அந்த அணியில் கிரேக் பிராத்வெய்ட், கேசி கார்டி, ஷாய் ஹோப், மிகைல் லூயிஸ் ஆகியோர் பேட்டிங்கிலும், ஷமார் ஜோசப், அல்ஜாரி ஜோசப், ஜெய்டன் சீலஸ், ஜோமல் வாரிகன் உள்ளிட்டோர் பந்து வீச்சிலும் நம்பிக்கை அளிக்கிறார்கள்.

இந்த இரு அணிகள் இதுவரை 120 டெஸ்டில் நேருக்கு நேர் மோதி உள்ளன. இதில் 61ல் ஆஸ்திரேலியாவும், 33ல் வெஸ்ட்இண்டீசும் வெற்றி பெற்றுள்ளன. 25 போட்டி டிரா ஆனது. மற்றொரு டெஸ்ட் சமனில் (டை) முடிந்தது. 1993ம் ஆண்டுக்கு பிறகு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெஸ்ட் இண்டீஸ் வென்றதில்லை. அந்த 32 ஆண்டுகால ஏக்கத்தை உள்ளூர் சூழலில் தீர்க்கும் நோக்கத்தில் வெஸ்ட்இண்டீஸ் அணி களமிறங்க உள்ளது.

# அமித் சாத்விக் அதிரடி... கோவைக்கு எதிரான ஆட்டத்தில் திருப்பூர் அணி வெற்றி




டி.என்.பி.எல். தொடரில் நெல்லையில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் லைகா கோவை கிங்ஸ் திருப்பூர் தமிழன்ஸ் அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்ற திருப்பூர் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில்பேட்டிங்செய்யகளமிறங்கியகோவை அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. திருப்பூர் அணியின் பந்துவீச்சாளரான இசக்கிமுத்து சிறப்பாக பந்துவீசி கோவை அணிக்கு கடும் அழுத்தம் கொடுத்தார். அந்த அழுத்தத்திலிருந்து கோவை அணியால் கடைசி வரை நிமிர முடியவில்லை. அந்த அணியில் 3 வீரர்கள் மட்டுமே 20 ரன்களை தாண்டினர். கேப்டன் ஷாருக்கான் 19 ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

20 ஓவர்கள் முடிவில் கோவை அணி 9 விக்கெட்டுகளை இழந்து 137 ரன்கள் அடித்துள்ளது. அந்த அணியில் அதிகபட்சமாக பாலசுப்பிரமணியம் சச்சின் 24 ரன்கள் அடித்தார். திருப்பூர் தரப்பில் இசக்கிமுத்து 3 விக்கெட்டுகளும், சாய்கிஷோர் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதனையடுத்து 138 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி திருப்பூர் அணி விளையாடியது.

தொடக்க ஆட்டகாரர்களாக அமித் சாத்விக், துஷார் ரஹேஜா ஆகியோர் களமிறங்கினர். ஆரம்பத்திலேயே அதிரடி காட்டிய அமித் சாத்விக் கோவை அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் விளாசினார். அவருடன் நிலைத்து நிற்காமல் மற்ற வீரர்கள் சொற்ப ரன்களிலேயே தங்களின் விக்கெட்டை பறிகொடுத்தனர்.

இறுதியில் திருப்பூர் அணி 16.5 ஓவரில் 3 மட்டுமே இழந்து 140 ரன்கள் எடுத்தது. இதன்மூலம் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் கோவை அணியை வீழ்த்தி திருப்பூர் அணி அசத்தல் வெற்றி வெற்றது. அமித் சாத்விக் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 66 ரன்களுடன் களத்தில் இருந்தார். கோவை அணி சார்பில் புவனேஸ்வரன், திவாகர், சுப்ரமணியன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.